திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்திற்குச் சொந்தமான பெரிய கார்களில் ஒன்று, சில மாதங்களுக்கு முன்பு உதகையில் விபத்துக்கு உள்ளாக்கியது. அது எந்தச் சூழ்நிலையில், யார் அதில் சென்றபோது விபத்து ஏற்பட்டது என்ற விவரத்தைச் சபைக்கு அறிவிக்கலாமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : அதற்கான விவரம் என்னிடம் இல்லை. ஆனல், 13—5—1967 அன்று செவர்லேட் இம்பாலா என்கிற கார் உதகையில் விபத்துக்குள்ளாகி, அது மிகவும் பழுதான நிலையில் இன்றையதினம் கோவையில் இருக்கின்றது. அதைப் பொது ஏலத்திற்குவிட வேண்டும் என்றும் அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.

Small Industries Corporation

* 25 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government proposes to appoint a full-time Managing Director for the Madras State Small Scale Industries Corporation Limited?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழக சிறு தொழில் கார்ப்பரேஷனுக்கு 4-2-1968 முதல் ஒரு முழு நேர நிர்வாக நெறியாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

DR. H. V. HANDE : Sir, will the Hon. Minister be pleased to state the number of units that are under this particular Corporation and also what is the substantial progress made by his Corporation in the matter of developing industries. Also, will he be pleased to place before this House details about this Corporation?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் அதிகத் தொடர்பு இல்லை. 1—12—1965-ல் 65 தொழில் யூனிட்டுகள் இந்தக் கார்ப்பொரேஷனின் கீழ்க்கொண்டு வரப்பட்டது. இந்தக் கார்ப்பொ செய்யப்பட்டிருக்கிறது. அதிகமான இடங்களைக் கொடுத்தால் நலமாக இருக்காதா என்பதை அரசாங்கம் யோசிக்குமா ?

செஞ்சி நகரத்திற்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

* 26 வின.—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செஞ்சி நகரத்தில் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமல் படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.